தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## குமரி மாவட்டத்தில் மழை சற்று தணிந்தது: அணைகளில் நீர்மட்டத்தை முழுக்கொள்ளளவு உயர்த்த திட்டம்

குமரி மாவட்டத்தில் மழை சற்று தணிந்துள்ள நிலையில், அணைகளின் நீர்மட்டத்தை படிப்படியாக உயர்த்தி முழுக் கொள்ளளவுக்கு கொண்டு வர பொதுப்பணித் துறையினர் திட்டமிட்டுள்ளனர். வெள்ளப் பெருக்கை தடுத்த பொதுப்பணித் துறையினர்: குமரி மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலத்துக்கும் மேலாகத் தொடர்ந்து பெய்து வந்த மழையின் காரணமாக பேச்சிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் சிற்றாறு உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் வெள்ள அபாய அளவைக் கடந்து நிற்கிறது. இதில், கடந்த ஆண்டுகளைப் போலில்லாமல் நிகழாண்டு பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளில் உள்வரத்தாக வந்த கூடுதல் தண்ணீரை, பாசனப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரும் வகையில் பாசனக் கால்வாய்கள் வழியாக திறந்து விடப்பட்டது. இதன்மூலம் ஆறுகளில் கரையோரப் பகுதிகளில் ஏற்பட இருந்த குறைந்தபட்ச வெள்ளப் பெருக்கும் தடுக்கப்பட்டது. 75 அடியைக் கடந்து சென்ற பெருஞ்சாணி நீர்மட்டம்: தற்போது பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 75 அடியைக் கடந்து, 75.32 என்ற அளவில் உள்ளது. அணையிலிருந்து பாசனக் கால்வாய் வழியாக, விநாடிக்கு 350 கனஅடி தண்ணீர் திறக்கப் பட்டுள்ளது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 45.80 ஆக உயர்ந்துள்ளது. இதுபோல், சிற்றாறு அணைகளின் நீர்மட்டம் தலா 15.58 அடியாக உயர்ந்த நிலையில் உள்ளது. இந்த அணைகளில் இருந்து விநாடிக்கு 150 கனஅடி தண்ணீர் பாசனக் கால்வாயில் திறக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து, பொதுப்பணித் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: குமரி மாவட்டத்தில் மழை சற்று தணிந்துள்ளதால்

இம்மாதம் இரண்டாவது வார இறுதியில் நீர்மட்டத்தை படிப்படியாக உயர்த்தி, அனைத்து அணைகளிலும் முழுக் கொள்ளளவு நீர்மட்டம் எட்டப்படும் என்றார்.

## கொடைக்கானலில் சீதாப் பழம் விளைச்சல் அமோகம்: விவசாயிகள் மகிழ்ச்சி

கொடைக்கானலில் சீதாப் பழம் விளைச்சல் அமோகமாக உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கொடைக்கானலில் அடுக்கம், பாலமலை, பேத்துப்பாறை, சாமக்காட்டுப் பள்ளம், பிரகாசபுரம், சின்னப் பள்ளம், பெரும்பள்ளம் உள்ளிட்ட இடங்களில் ஊடு பயிராக சீதாப் பழம் சாகுபடி செய்யப்படுகிறது. இது, அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் நன்கு விளைச்சல் தரும். சமதளப் பகுதியில் விளையும் சீதாப் பழத்துக்கும், மலைப் பகுதிகளில் விளையும் சீதாப் பழத்துக்கும் வித்தியாசம் உள்ளது. இங்கு விளையும் சீதாப் பழம், சதைப் பிடிப்பு அதிகமாகவும், விதைகள் குறைவாகவும் காணப்படும். மேலும், இரும்புச் சத்து அதிகமாக இருப்பதால், கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட வெளிமாநில சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர். இது குறித்து, பழ வியாபாரி கூறுகையில், தற்போது, இங்கு சீதாப் பழம் சீசன் துவங்கியுள்ளது. இந்தாண்டு சீதாப் பழம் விளைச்சல் அதிகம் உள்ளது. எனவே, வெளி இடங்களுக்கும் அனுப்பப்படுகிறது. இங்குள்ள சீதாப் பழம் 2 கிலோவிலிருந்து 3 கிலோ எடை வரை விளையும் தன்மை கொண்டது. இதன் விலை ஒரு கிலோ ரூ.50 முதல் ரூ.70 வரை என்றார்.

## 5 மாவட்ட விவசாயிகளுக்காக திருச்சி வந்தது 2651 டன் யூரியா

திருச்சி உள்ளிட்ட 5 மாவட்டங்களின் விவசாயப் பயன்பாட்டுக்காக திங்கள்கிழமை வந்த 2651 டன் யூரியா தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. போதியளவில் அடியுரம் வந்ததால் தட்டுப்பாடில்லாமல் சம்பா சாகுபடிக்கான தொடக்க நிலைப்

பணிகளை விவசாயிகள் மேற்கொண்டு வந்தனர். ஆனால், சாகுபடி பயிருக்கு அடுத்து இட வேண்டிய யூரியா குறிப்பிட்ட காலத்தில் போதியளவு வரத்து இல்லாததால் விவசாயிகள் பெரும் பாதிப்புள்ளாகி னர். இந்த நிலையில், இப்கோ மூலம் ஏற்கெனவே 8000-த்துக்கும் மேற்பட்ட டன் யூரியா பெறப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிலையில், மங்களூர் துறைமுகத்திலிருந்து திங்கள்கிழமை காலை சரக்கு ரயில் மூலம் 2651 டன் யூரியா திருச்சி வந்தது. திருச்சி, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர், அரியலூர் மாவட்டங்களிலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கு லாரிகள் மூலம் யூரியா அனுப்பி வைக்கப் பட்டன. இதில் 350 டன் யூரியா டான்பெட் அலுவலகக் கிடங்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக இப்கோ அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், காரைக்கால் துறைமுகத்துக்கு கப்பல் மூலம் வந்த 1 லட்சம் டன் யூரியாவும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு லாரிகள் மூலம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருவதால், விவசாயிகளுக்கு யூரியா தட்டுப்பாடு இல்லாமல் விநியோகிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பெல்லாரி சாகுபடி பரப்பை அதிகரிக்க திட்டம்

அரியலூர் மாவட்டத்தில் பெல்லாரி சாகுபடி பரப்பை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

அரியலூர் மாவட்ட தோட்டக் கலைத் துறை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 56 விவசாயிகளுக்கு தலா ரூ. 12 ஆயிரம் வீதம் ரூ. 6 லட்சம் மதிப்பிலான பெல்லாரி வெங்காய விதைகளை வழங்கி ஆட்சியர் பேசியது:

தமிழக அரசு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக் கலை இயக்கம் 2014-15 ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் அரியலூர் மாவட்டம் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் பெல்லாரி வெங்காய சாகுபடிப் பரப்பை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் அரியலூர் மாவட்டத்துக்கு 125 ஏக்கர்

பரப்பு அதிகரிக்க ரூ. 6 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு பெல்லாரி வெங்காய சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு 50 சதவீத மானியத்தில் 1 ஹெக்டேருக்கு ரூ. 12 ஆயிரம் வீதம் வழங்கப்படுகிறது என்றார் ஆட்சியர். நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் ஏ.ஆர். குணசேகரன், தோட்டக் கலை துணை இயக்குநர் சுப்பையா, உதவி இயக்குநர்கள் பா. சரண்யா, சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**<u>வெட்டிக்காடு பகுதியில் 71.4 மி.மீ. மழை</u>**

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக வெட்டிக்காடு பகுதியில் 71.4 மி.மீ. மழை பெய்தது. மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்): வெட்டிக்காடு 71.4, அதிராம்பட்டினம் 46.2, மதுக்கூர் 43.6, பட்டுக்கோட்டை 42, குருங்குளம் 30, ஈச்சன்விடுதி 27, வல்லம் 18.5, பேராவூரணி 16, ஒரத்தநாடு 14.2, நெய்வாசல் தென்பாதி 12.6, பூதலூர் 4.6, அய்யம்பேட்டை, 4, திருவிடைமருதூர் 3.4, தஞ்சாவூர் 3.2, கல்லணை, பாபநாசம் தலா 3, கும்பகோணம் 2.6, மஞ்சலாறு, திருக்காட்டுப்பள்ளி தலா 1.8.

# தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**


**<u>வேளாண் உதவி இயக்குனர் அறிவுரை; நிலக்கடலையில் மகசூல் பெற ஜிப்சம்</u>**

மோகனூர் : "நிலக்கடலை பயிரில், அதிக மகசூல் பெற தேவையான அளவு ஜிப்சம் இட வேண்டும்' என, மோகனூர் வேளாண் உதவி இயக்குனர் கந்தசாமி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:

இறவை நிலக்கடலைக்கு ஒரு ஏக்கர் விதைப்புக்கு, 50-55 கிலோ திரட்சியான விதைப்பருப்பு தேவைப்படும். கோ-3, டி.எம்.வி.7, வி.ஆர்.ஐ. 2 போன்ற ரகங்கள், பயிரிடலாம். ஒரு ஏக்கர் விதைக்கு, இரண்டு பொட்டலம் ரைசோபியம் மற்றும் இரண்டு பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிர் கலவையுடன், 200 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி பூஞ்சானம் கலந்து, 20 நிமிடம், நிழலில் உலர்த்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும்.செடிகள் வரிசைக்கு வரிசை 30 செ.மீ., இடைவெளியும், பயிருக்கு பயிர், 10 செ.மீ., இடைவெளியும் இருக்குமாறு பராமரிக்க வேண்டும். நிலக்கடலைக்கு ஒரு ஏக்கருக்கு, 10:20:30 கிலோ, தழை:மணி:சாம்பல் சத்து தரக்கூடிய உரங்களையிட வேண்டும். தழை மற்றும் சாம்பல் சத்தில், 50 சதம் அடியுரமாகவும், 25 சதம் விதைத்த, 20வது நாளில் மேலுரமாகவும், 25 சதவீத்தை 45வது நாளில் மேலுரமாகவும் இடவேண்டும். மேலும், ஏக்கருக்கு, 80 கிலோ ஜிப்சம் அடியுரமாகவும், 80 கிலோ ஜிப்சம், 45வது நாளில், மேலுரமாகவும் இடவேண்டும். அதனால், மண் பொலபொலப்பாகி, பொக்குக்காய்கள் இல்லாமல், அதிக எண்ணிக்கையிலான, திரட்சியான காய்கள் கிடைக்கும்.இலைவழியாக, ஒரு ஏக்கருக்கு டிஏபி ஒரு கிலோ, அம்மோனியம் சல்பேட் 0.4 கிலோ, போராக்ஸ், 200 கிராம் ஆகியவற்றை, ஒரு நாள் இரவு முழுவதும் ஊறவைத்து, மறுநாள் தெளிந்த நீரை வடிகட்டி தண்ணீர் மற்றும் ஒட்டம் திரவம் கலந்து தெளிவிக்க வேண்டும்.அவற்றை, 25வது, 35வது நாட்களில், இரண்டு முறை தெளிக்க வேண்டும். அதனால், திரட்சியான மணிகள் கிடைக்கும். நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறையை போக்க, ஐந்து கிலோ நிலக்கடலை நுண்ணூட்டத்தை, 20 கிலோ மணலுடன் கலந்து கடலை விதைப்புக்கு பின் சீராக தூவவேண்டும். மேலும் விபரங்களுக்கு, மோகனூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி, நிலக்கடலைப் பயிரில் அதிக

மகசூல் எடுக்க உரிய ஆலோசனை பெறலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**<u>அவகோடா பழம் சாகுபடியில் சாதனை</u>**



வெளிநாடுகளில் ஆப்பிள், ஆரஞ்ச் பழங்களுக்கு இணையான பழமாக கருதப்படுபவை அவகோடா. மழை அதிகம் பெய்யும் மலைப்பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் பணப்பயிர்களின் இடையே அவகோடா சாகுபடி செய்யப்படுகிறது. கொடைக்கானல் மலைப்பகுதிகளில் அதிக அளவில் அவகோடா மரங்கள் உள்ளன. காமனூர் கிராமத்தில் இப்பழ சாகுபடியில் பத்து ஆண்டுகளாக தொடர்ந்து வருகிறார் விவசாயி வீரஅரசு. நான்கு தலைமுறையாக விவசாயத்தை தொடர்ந்து வரும் இவரது தோட்டத்தில் காப்பி, ஆரஞ்சு, மிளகு போன்ற பயிர்களினூடே அவகோடா சாகுபடி செய்கிறார். இப்பழ சாகுபடி பற்றி வீரஅரசு கூறியதாவது: வெண்ணெய் பழம் என அழைக்கப்படும் அவகோடா சுவையை தெரிந்தவர்கள் என்ன விலை கொடுத்தும் வாங்க தயங்கமாட்டார்கள். இப்பகுதியில் நான்காவது தலைமுறையாக நான் விவசாயம் செய்கிறேன். 2004ம் ஆண்டில் தடியன்குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் பார்த்திபன் அறிவுரையால் எனது தோட்டத்தில் நிழல் மரங்களாக அவகோடா கன்றுகளை 30 அடிக்கு 30 அடி இடைவெளியில் ஏக்கருக்கு சுமார் 50 கன்றுகளாக 500 கன்றுகள் நடவு செய்தேன். தாண்டிக்குடியில் விவசாயி மோகன சுந்தரத்தின் தோட்டத்தில் பெரிய பழங்கள் விளைந்தன. அதனால் அங்குள்ள மரத்தின் கிளைகளை எடுத்து வந்து எனது தோட்டத்தில் நடவு செய்த கன்றுகளில் ஒட்டுக் கட்டினேன். இதில் 60 சதவீதம் வெற்றி கிடைத்தது. 300 மரங்கள் வளர்ந்து நான்காவது ஆண்டிலிருந்து மகசூல் கிடைக்க துவங்கியது. 2014-15ம்

ஆண்டில் மரம் ஒன்றிற்கு ரூ.2,000 வீதம் ரூ.6 லட்சம் வருவாய் கிடைத்தது. இந்த மரங்கள் சுத்தமான இயற்கை வழி விவசாயத்தில் வளரக்கூடியவை. வன விலங்குகள் இதனை சேதப் படுத்தாது. தற்போது இந்த பழங்கள் உணவுப் பொருளாக மட்டும் அல்லாது பேஷியலுக்காக அழகு நிலையங்களிலும் பயன்படுத்தப் படுவதால், இதற்கு வரவேற்பு அதிகரித்துள்ளது. வெளிநாட்டில் சத்து பானமாகவும், நட்சத்திர ஓட்டல்களில் சப்பாத்தி மென்மையாக தயாரிக்க வெண்ணைக்கு பதிலாக இப்பழம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மரத்தை விவசாயிகள் நம்பிக்கையுடன் நடவு செய்யலாம். ஒரு பழம் 500 கிராம் முதல் 1.250 கிலோ வரை இருக்கும். ஒரு மரம் 200 முதல் 300 காய்கள் காய்க்கும். ஒரு மரத்திற்கு 60 கிலோ தொழு உரம் மட்டும் போதுமானது. ஒரு கிலோ ரூ.60 க்கு விற்பனையாகிறது. வேலை யாட்கள் உதவி அதிகம் தேவைப்படாத, அதிக லாபமும், நல்ல எதிர்காலமும் கொண்ட வறட்சியை தாங்கி மானாவரி சாகுபடியில் லாபம் தரும் அவகோடா விவசாயிகளுக்கு ஒருபோதும் நஷ்டத்தை கொடுக்காது என்றார். இவரோடு பேச 94438 33309.- **டபிள்யு.எட்வின் மதுரை.**

**<u>சின்ன சின்ன செய்திகள்</u>**



யூரியா தட்டுப்பாட்டிற்கு உதவும் இயற்கை வழி முறைகள் : யூரியா தட்டுப்பாடு பிரச்னைக்கு இயற்கை விவசாயத்தில் ஆழ்ந்த அனுபவ முள்ளவரான தஞ்சாவூர் மாவட்டம் தேனாம்படுகை கிராமத்தைச் சேர்ந்த பாஸ்கரன். ஒரு பாத்திரத்தில் 5 கிலோ சாணம், 3 கிலோ மாட்டுச் சிறுநீர், 1/2 கிலோ வெல்லம் ஆகிய மூன்றையும் ஒன்றாக கலந்து மூடிவைத்து நொதிக்கவிட வேண்டும். இன்னொரு பாத்திரத்தில் நன்கு கனிந்த 15 வாழைப்பழம், கால் கிலோ வெல்லத்தை ஒன்றாக கலந்து நொதிக்கவிட வேண்டும். இரண்டு நாட்கள் கழித்து இந்த இரண்டு கலவையையும்

ஒன்றாக்கி ஓரிரு நாட்களுக்கு நொதிக்க வைக்க வேண்டும். இதனுடன் தலா ஒரு கிலோ ரைசோபியா, அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, சூடோமோனாஸ் (இந்த உயிர் உரங்களின் விலை மிகவும் குறைவு. அருகிலுள்ள வேளாண் விரிவாக்க மையங்களில் கிடைக்கும்) ஆகியவற்றையும் கலந்து ஒரு நாள் இரவு நொதிக்க விட வேண்டும். இந்த கரைசல் தோசை மாவு பதத்திற்கு மாறி இருக்கும். இதோடு இரண்டு கிலோ கடலைப்பிண்ணாக்கு கலந்து சிலமணி நேரம் வைத்திருந்தால், ஈரப்பதம் உறிஞ்சப்பட்டு புட்டு பதத்திற்கு மாறி விடும். இதை ஒரு ஏக்கர் நெல்வயலில் பரவலாக தெளிக்க வேண்டும். அடுத்த சில நாட்களில் மண்ணில் நுண்ணுயிரிகள் பெருகி பயிர் பச்சை பிடித்து ஆரோக்கியமாக வளரத் தொடங்கி விடும். இந்த இடுபொருளை மேம்படுத்தப்பட்ட அமுதக்கரைசல் என அழைக்கிறார்கள். இதற்கு பதிலாக, இன்னும் எளிய முறையில் அக்கம் பக்கத்தில் கிடைக்கக்கூடிய இலை தழைகளைக் கொண்டே கூட இடுபொருள் தயாரித்து இலைவழி தெளிப்பாகவும் ஊட்டச்சத்து கொடுக்கலாம். இது பயிர் வளர்ச்சி ஊக்கியாகவும், பூச்சி விரட்டியாகவும் பயன்படும். இதைத் தயாரிக்க, தலா 5 கிலோ வேம்பு, புங்கன் நொச்சி, நெய்வேலி காட்டாமணக்கு, ஆடாதோடை இலைகளை ஒன்றாகக் கலந்து அவை மூழ்கும் அளவுக்கு தண்ணீர் ஊற்றி சுண்டக் காய்ச்ச வேண்டும். பிறகு ஆறவைத்து வடிகட்டி 3 லிட்டர் பசுமாட்டு சிறுநீர் கலக்க வேண்டும். இக்கரைசலில் இருந்து இரண்டு லிட்டர் எடுத்து 26 லிட்டர் தண்ணீர் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கலாம். இந்த தொழில்நுட்பங்கள் அனைத்தும் யூரியாவைக் காட்டிலும் தழைச்சத்தும், இதர சத்துக்களும் அதிகமாகவே கொடுக்கக் கூடிய செலவு குறைந்த இயற்கையான நுட்பங்களே. இதை விவசாயி அனுபவத்திலிருந்து உணர்ந்து சொல்கிறார். தொடர்புக்கு: தேனாம் படுகை பாஸ்கரன், போன்: 94428 71049, மயில்வாகனன், போன்: 9884904437. மேம்படுத்தப்பட்ட பசுந்தீவனப்பயிர்கள் சாகுபடி : விவசாயி தானிய மற்றும் பயிறு வகை விதைகளை விதைக்கும் போது

தெளிப்பு விதைப்பு முறையைக் கைவிட்டு விதைகளை வரிசை விதைப்பு முறையில் விதைக்க வேண்டும். ஒரு எக்டருக்கு தேவைப்படும் விதைகளைக் கொண்டு கூடுதல் பரப்பளவில் வரிசை முறையில் பயிரிட முடியும். மாவுச்சத்து அதிகம் கொண்ட தீவனப்பயிர்களான கோ.3, கோ.4, தீவன மக்காச்சோளம், தீவனச்சோளம் வகைகளை 3 வரிசைகளிலும், அடுத்து புரதச்சத்து அதிகம் கொண்ட பயிறு வகை தீவனப் பயிர்களான முயல் மசால், வேலிமசால், தட்டைப்பயறு ஆகியவற்றை 1 வரிசையிலும் பயிரிட வேண்டும். மீண்டும் அடுத்த 3 வரிசைகள் கோ.3, கோ.4 தீவன மக்காச்சோளம், தீவனச்சோள வகைகள், அடுத்த 1 வரிசையில் முயல் மசால், வேலி மசால், தட்டைப்பயறு என மீண்டும் மாற்று முறையில் பயிரிட வேண்டும். இவ்வகையில் நிலத்தினை அறுவடை செய்யும் போது மாவுச்சத்து மற்றும் புரதச்சத்து பசுந்தீவனம் ஒன்றாகக் கிடைப்பதால் அப்படியே கால்நடைகளுக்கு வழங்கலாம். புரதச்சத்து அளிப்பதால் கால்நடைகளில் சினைப்பிடிப்பு சதவீதம் அதிகரிக்கிறது. கால்நடைகளுக்கு தீவனப்பயிர் சாகுபடி மாதிரி பரப்பளவு 10 சென்ட் . 1) கம்பு நேப்பியர் புல் - கோ.4 - 4 சென்ட் 2)தீவனச்சோளம் கோ.எப்.எஸ்.29- 1 சென்ட் 3) வேலிமசால் - 3 சென்ட் -

**டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**<u>களர், உவர் நிலத்தை பயிர் வளர்ச்சிக்கு ஏற்றபடி மாற்றுவது எப்படி</u>**



தமிழ்நாட்டில் 3 லட்சம் எக்டேர் நிலப்பரப்பு உப்புத் தன்மையால் பாதிக்கப்பட்டுள்ளது. இத்தன்மையைக் குறைத்தால் மட்டுமே பயிர் வளர்ச்சிக்கு ஏற்றவாறு மாறும். எப்படி இந்நிலங்களை மேம்படுத்துவது? நிலச்சீர்திருத்தம் செய்தல், களர் நிலத்திற்கு ஏற்ற பயிர் ரகங்களை உருவாக்கிப் பயிரிடுதல், இதற்கேற்ற உழவு, உரம், நீர் நிர்வாக

முறைகளை மேற்கொள்ளுதல். தமிழ்நாட்டில் 2 லட்சம் எக்டேர் நிலம் களர் நிலமாகவும், 1 லட்சம் எக்டேர் நிலம் உவர் நிலமாகவும் உள்ளது. இதில் 99% நிலங்கள் தரிசாக, வீணாக உள்ளன. இந்நிலங்களில் உள்ள தீங்கு விளைவிக்கும் உப்புக்களை தகுந்த சீர்திருத்த முறைகள் மூலம் மாற்ற வேண்டும். மாற்றினால் சிறந்த பயிர் விளையும் பூமியாக மாற்ற முடியும். களர் நிலம் : களர் நிலங்களில் களி மண்ணின் மீது சோடிய அயனிகள் அதிகமாகப் படிந்து விடுகின்றன. அதனால் மண் இறுகி, காற்றோட்ட வசதி இல்லாமல் இருப்பதால் வேரின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. மண்ணில் கார அமிலநிலை அதிகம் இருப்பதால் பயிரால் ஊட்டச் சத்துக்களைப் போதுமான அளவு எடுத்துக் கொள்ள முடிவதில்லை. நுண்ணுயிர்களின் பெருக்கமும், செயல்பாடும் பாதிக்கப்படுகிறது. மேலும் சோடியம் உப்புக்கள் செடியினுள் அதிகம் சென்று நச்சுப் பொருளாக அமைகின்றன. எனவே செடிகள் வளர்ச்சி குன்றி விடும். **சீர்திருத்தம் செய்வது எப்படி** ஜிப்சம் என்ற கால்சியம் சல்பேட் சீர்திருத்தியை களர் மண்ணுடன் நன்கு கலக்கி, சேற்றுழவு செய்து, நல்ல நீருடன் தேங்கச் செய்து, பின் வடிகால் மூலம் வடியச் செய்தால் சோடியம் அயனிகளை அகற்றி விடலாம். உவர் நிலம் : கார அமில நிலை 8.5க்கு மேற்படாமல் இருக்கும் நிலத்தில் நீரில் கரையும் உப்புக்கள் வெண்மை நிறமாகப் படிந்து இருக்கும் இந்த உப்புக்களால் பயிரின் வேர்களுக்கு நீரை எளிதில் உறிஞ்சும் சக்தி குறையும். சோடியம், கால்சியம், மக்னீசியம் போன்ற உப்புக்கள் செடியுள் சென்று நச்சுப் பொருளாக மாறி பயிர் பாதிக்கப்படும். **சீர்திருத்தம் செய்வது எப்படி** உவர்நிலத்தை சிறு பாத்திகளாகப் பிரித்து உவர் அற்ற நீர், மழைநீர் அல்லது வாய்க்கால் நீர் பாய்ச்சி, தேக்கி, வடிகால் மூலம் உப்புக்களை வெளியேற்றிப் பின் ராகி, பருத்தி, குதிரை மசால், தக்காளி, சாகுபடி செய்ய வேண்டும். இயற்கை உரம், காம்போஸ்ட் உரம் இட வேண்டும். இப்படி செய்யும்போது திருச்சி, மணப்பாறை சாலையில், நாவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் உள்ள

தமிழ்நாடு அரசின் ""களர் உவர் ஆராய்ச்சி மையத்தை" அணுகி ஆலோசனை பெறலாம். சீர்திருத்தம் செய்து நெல் மற்றும் இதர பயிர்களை விளைவித்து வாழ்வில் வளம் பெறலாம். இவ்வாறு தமிழ்நாட்டில் உள்ள 3 லட்சம் பாதிக்கப்பட்டுள்ள தரிசு நிலத்தை இம்முறையில் மாற்றி "தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில்" உதவிபெற்று பயிர் செய்தால் உணவு உற்பத்தி அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. -

**எம்.ஞானசேகர், விவசாய ஆலோசகர் 97503 33829**

## சப்பைநோய் தடுப்பூசி

கண்டாச்சிபுரம்: கண்டாச்சிபுரம் கால்நடை மருத்துவமனையில் சப்பை நோய் தாக்கிய கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. கண்டாச்சி புரம் அடுத்த வீரங்கிபுரம் கிராமத்தில் சில வாரங்களுக்கு முன் சப்பை நோய் தாக்கியதில் கன்று ஒன்று இறந்தது. கடந்த 12 ஆண்டுகளுக்குப் பிறகு கண்டாச்சிபுரம் பகுதியில், இந்நோய் கால்நடைகளை தாக்கி யுள்ளது. இந்த நோய் மேலும் பரவாமல் இருப்பதற்காக, முன் னெச்சரிக்கை நடவடிக்கையாக டாக்டர் அருண் தலைமையில் 520 கால்நடைகளுக்கு சப்பை நோய் தடுப்பூசி போடப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை கால்நடை ஆய்வா ளர் வஜ்சிரவேல், உதவியா ளர் நதியா செய்தனர்.

## நெற்றிக்கண்ணுடன் பிறந்த ஆட்டுக்குட்டி

விழுப்புரம்: விழுப்புரம் அருகே நெற்றியில் ஒரே கண்ணுடன் பிறந்த ஆட்டுக் குட்டியை அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர். விழுப்புரம் அடுத்த பூசாரிப்பாளையம், மாரியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் பெருமாள் (60). கூலித் தொழிலாளியான இவருக்கு அரசு சார்பில், சில மாதங்களுக்கு முன் 4 ஆடுகள் இலவசமாக வழங்கப்பட்டது. இந்த ஆடுகளை மட்டும் பெருமாள் மேய்த்து பராமரித்தார். இந்நிலையில் இதில் ஒரு ஆடு, நேற்று மாலை 6:00 மணிக்கு, ஒரு குட்டியை ஈன்றது. இந்த குட்டிக்கு வழக்கமான ஆடு

களுக்கு இருப்பது போல் இரு கண்கள் இல்லை. மாறாக நெற்றியில் மட்டும் ஒரு பெரிய கண் உள்ளது. நாக்கு நீளமாக உள்ளது.

## வெளிமாநிலத்தில் இருந்து 5, 200 டன் உரங்கள் வருகை

திருச்சி : வெளி மாநிலத்தில் இருந்து, இரண்டு நாட்களில் ரயில் மூலமாக, 5,200 டன், யூரியா மற்றும் பொட்டாஷ், திருச்சி குட்ஷெட்டிற்கு வந்துள்ளது. தமிழகத்தில் நடப்பாண்டு நல்ல மழை பெய்துள்ளதால், மேட்டூர் அணை திறக்கப்பட்டது. கரூர், திருச்சி, அரியலூர், புதுக்கோட்டை மற்றும் டெல்டாவில் நெல் நடவு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.நெல் பயிர்களுக்கு தேவையான மேல் உரங்களான யூரியா, பொட்டாஷ் தட்டுப்பாடு மற்றும் கள்ளச்சந்தையில் விற்பனையால், விவசாயிகள் முற்றுகை போராட்டங்களை நடத்தினர்.நேற்று முன்தினம், ஆந்திரா மாநிலம் விசாகப்பட்டிணத்தில் இருந்து, 2.600 டன் யூரியாவும், நேற்று காலை, உத்தர பிரதேசத்தில் இருந்து, 2,600 டன் பொட்டாஷ், ரயில் மூலம் திருச்சிக்கு வந்தது. விவசாயிகளுக்கு வினியோகிக்க லாரிகள் மூலம் அனுப்பிவைத்தனர்.

## கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 1,300 டன் யூரியா விற்க ஏற்பாடு

தஞ்சாவூர் : தஞ்சாவூர் மாவட்டத்தில், உர தட்டுப்பாடை தவிர்க்கும் விதமாக, கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம், 1,300 டன் யூரியா உரம், விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட உள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில், சம்பா மற்றும் தாளடி பருவத்துக்கு நெல் சாகுபடி மும்முரமாக நடந்து வருகிறது. இதுவரை, மாவட்டம் முழுவதும், ஒரு லட்சத்து, 30 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி முடிந்துள்ளது. சம்பா சாகுபடியை பொறுத்தவரை, நாற்றுகள் நடவு செய்த பின், மேலுரமாக யூரியா இடுவது வழக்கம். இதற்காக, கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலம் ஏற்கனவே, 12 ஆயிரத்து, 157 மெட்ரிக் டன் யூரியா உரம் விற்பனை செய்யப்பட்டது. மேலும், 10

ஆயிம் மெட்ரிக் டன் யூரியா உரம் தேவைப்பட்ட நிலையில், வரத்து குறைந்ததால், யூரியா உரத்துக்கு கடும் தட்டுப்பாடு நிலவியது. உரத்தட்டுப்பாடு காரணமாக, மகசூல் பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என்ற ஐயப்பாடு விவசாயிகள் மத்தியில் நிலவியது. மேலும், தட்டுப்பாடின்றி கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் யூரியா உரம் வழங்குமாறு கடந்த, 28ம் தேதி நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் மாவட்ட கலெக்டரிடம் விவசாயிகள் வலியுறுத்தினர்.விரைவில், யூரியா உரம் வழங்கப்படும், என விவசாயிகளிடம் கலெக்டர் சுப்பையன் உறுதியளித்தார். இந்நிலையில், கொரமண்டல் உர நிறுவனத்திடமிருந்து, 1,300 டன் யூரியா உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இவை, காரைக்கால் துறைமுகத்திலிருந்து சரக்கு ரயில் மூலம், நேற்று முன்தினம் இரவு, தஞ்சாவூர் ரயில் நிலையம் வந்தடைந்தது.இவை, நேற்று காலை முதல், மாவட்டம் முழுவதும் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு, லாரிகள் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், கிரிப்போ உர நிறுவனத்திடமிருந்து, 2,600 மெட்ரிக் டன் யூரியா உரம் இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இவை, காரைக்கால் துறைமுகம் வழியாக தஞ்சைக்கு நாளை (4ம் தேதி) வரும், என எதிர்பார்க்கப்படுகிறது. இதையும், கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இவை தவிர, இப்கோ உர நிறுவனத்திடமிருந்து, ஒரு லட்சத்து, 60 ஆயிரம் மெட்ரிக் டன் யூரியா உரம் இறக்குமதி செய்யப்பட உள்ளது. இவை, காரைக்கால் துறைமுகத்திலிருந்து சரக்கு ரயில்கள் மூலம் விரைவில் டெல்டா பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு, அப்பகுதிகளில் உள்ள கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும், என்று வேளாண் இணை இயக்குனர் சேகர் தெரிவித்தார்.

## முருங்கைக்காய் விலை ரூ.10

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் ஒரு முருங்கைக்காய் விலை ரூ.10 க்கு விற்றது. தாராபுரம், இடையகோட்டை, மார்க்கம்பட்டி, வேடசந்தூர் பகுதிகளில் விளைந்த முருங்கைக்காய் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. சில நாட்களுக்கு முன்பு பெய்த தொடர்மழை காரணமாக செடிகளில் இருந்த முருங்கை பூக்கள் உதிர்ந்து விட்டன. இதனால் முருங்கை விளைச்சல் பாதிக்கப்பட்டது. தற்போது உள்ளூர் முருங்கை வரத்து மிகவும் குறைந்துவிட்டது. ஆனால் தேவை குறையாமல் உள்ளதால் இதன் விலை ஏறுமுகமாகவே இருந்து வந்தது. நேற்று ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.100 க்கு விற்றது. ஒரு கிலோவில் அதிகபட்சமாக 10 முருங்கைக்காய் இருக்கும். இதன்படி பார்த்தால் ஒரு முருங்கைக்காயின் விலை ரூ.10 ஆகும். தட்டுப்பாட்டை தவிர்க்க குஜராத் மாநிலம் பரோடாவில் விளைவிக்கப்பட்ட முருங்கைக்காய் லாரிகள் மூலம் கொண்டு வரப்படுகிறது. ஒரு கிலோ பரோடா முருங்கையின் விலை ரூ.140 ஆக உள்ளது. உள்ளூர் வரத்து இன்னும் சில நாட்கள் தான் நீடிக்கும் என்பதால், முருங்கைக்காய் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## வரத்து குறைந்ததால் தக்காளி விலை உயர்வு

ஒட்டன்சத்திரம்:வரத்து குறைவால் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் தக்காளி விலை அதிகரித்துள்ளது.ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் தக்காளி அதிகமாக விளைவிக்கப்படுகிறது. வறட்சியினால் சாகுபடி பரப்பளவு குறைக்கப்பட்டிருந்தது. புதிய தொழில் நுட்பத்தின் மூலம் பந்தல் அமைத்து தக்காளி பயிரிடும் முறை

கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் வெயில், மழையினால் ஏற்படும் பாதிப்பை தவிர்க்கலாம்.தற்போது சீசன் இல்லாததால் வரத்து குறைந்துள்ளது. சில நாட்களுக்கு முன் வரை ஒவ்வொரு கடைக்கும் 200 பெட்டி தக்காளி கொண்டுவரப்படும். இந்த வாரம் பெட்டிகளின் எண்ணிக்கை பாதியாக குறைந்துள்ளது. தேவை அதிகரிப்பால் விலை உயர்ந்துள்ளது. 14 கிலோ தக்காளி பெட்டி ரூ.150 க்கு விற்கப்பட்டு வந்தது. நேற்று முதல் அதே பெட்டி ரூ.220 க்கு விற்கப்படுகிறது.

**<u>மூன்று ஆண்டுகளுக்கு பிறகு நெல் சாகுபடி: மகிழ்ச்சியில் விவசாயிகள்</u>**

தேவதானப்பட்டி:மஞ்சளார் அணை பாசனம் மூலம் தேவதானப்பட்டி, டி.வாடிப்பட்டி, கெங்குவார்பட்டி பகுதியில் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு முதல் போகநெல் சாகுபடிக்காக நடவுப்பணி நடந்து வருகிறது. தேவ தானப்பட்டி அருகேயுள்ள மஞ்சாளார் அணையில் தேங்கும் நீரை ஆதாரமாக கொண்டு கெங்குவார்பட்டி, தேவதானப்பட்டி, அட்டணம் பட்டி, புல்லாக்காபட்டி, சாத்தாகோயில்பட்டி, டி.வாடிப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் முதல் போக நெல்சாகுபடி நடந்து வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக அணையில் நீர்பிடிப்பு பகுதியில் போதிய அளவு மழை பெய்யவில்லை. இதனால் நெல்சாகுபடியை விவசாயிகள் தவிர்த்து வந்தனர். இந்நிலையில் நடப்பு பருவத்தில் நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து அணை நிரம்பியது (மொத்தம் 57 அடி). உபரியாக வந்த 3 ஆயிரம் கனஅடிநீர் மருகால் மடை வழியாக ஆற்றில் திறக்கப்பட்டது. இதனால் 10 மேற்பட்ட கண்மாய்கள் நிறைந்தது. தற்போது மூன்று ஆண்டுக்கு பிறகு டி.வாடிப்பட்டி, கெங்குவார்பட்டி உட்பட மஞ்சளார் பாசன பகுதியில் முதல் போக நெல்சாகுபடிக்காக நடவுப்பணி நடந்து வருகிறது. மூன்று ஆண்டுகளுக்கு பின் நெல் சாகுபடியால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## அணைகளின் நீர் மட்டம்

தேனி:வைகை 34.88 (மொத்தம் 71) அடி, நீர் வரத்து 1873 கனஅடி, நீர் திறப்பு 360 கனஅடி. மஞ்சளாறு 48.20 (57)அடி, நீர் வரத்து 41 கன அடி, வெளியேற்றம் 100 கனஅடி. சேத்துப்பாறை 126.28 (126.28) அடி, நீர் வரத்து 45 கன அடி, வெளியேற்றம் 45 கனஅடி. சண்முகாநதி 47.50, நீர் வரத்து 3 கனஅடி, வெளியேற்றம் 1447. மழையளவு (மி.மீ.,): பெரியகுளம் 5, வைகை அணை 3, மஞ்சளாறு 1, ஆண்டிபட்டி 1.80, அரண்மனைபுதூர் 6.80, வீரபாண்டி 12, தேக்கடி 2.20, கூடலூர் 2, போடி 8.20, உத்தமபாளையம் 4, சோத்துப்பாறை 9.

## நீர்வடிப்பகுதி மேலாண் திட்டம்:பயனாளிக்கு மரக்கன்று வழங்கல்

சிவகங்கை:இளையான்குடி வட்டாரத்தில் நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் முனைவென்றி, கீழநெட்டூர், வலையனேந்தல், சிறுபாலை, மற்றும் முள்ளியரேந்தல் ஆகிய நீர்வடி பகுதிகளில் தனியார் நிலத்தில் பழமரக்கன்றுகள் நடவு செய்திட 700 சப்போட்டா, 300 எலுமிச்சை, 150 மாங்கன்று, 150 கொய்யா, 150 நெல்லி, 500 சவுக்கு கன்றுகள் பண்ணை உற்பத்தி மற்றும் சிறு தொழில் மேம்பாடு ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்டன. கடந்த மாதம் பெய்த மழை நீரினை பண்ணை குட்டைகளில் சேகரித்துள்ள பயனாளிகள் பண்ணை குட்டை கரையை சுற்றி பழ மரக்கன்றுகள் நடவு செய்துள்ளனர். இது தவிர பண்ணை குட்டைகளில் மீன் குஞ்சுகளும் விடப்பட்டு அவர்களின் வாழ்வாதாரத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளது. பயன் பெற்ற பயனாளிகள் வேளாண் துறைக்கும், நீர்வடிப்பகுதி பொறியாளர் கோகுல்கண்ணா, சமூகவியலாளர் விஜயலட்சுமி ஆகியோருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

**நெல்லை அணைகள் இன்று திறப்பு; தாமிரபரணியில் வெள்ள அபாயம்**

திருநெல்வேலி : நெல்லை மாவட்ட அணைகள் இன்று திறக்கப் படுகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு உள்ளிட்ட 11 அணைக்கட்டுகள் உள்ளன. 143 அடி உச்சஅளவை கொண்ட பாபநாசம் அணைக்கட்டில் நேற்று காலை நீர்மட்டம் 140 அடியாக உயர்ந்தது. 156 அடி கொண்ட சேர்வலாறு அணையின் நீர்மட்டம் நேற்று 151.08 ஆனது. 118 அடி கொண்ட மணிமுத்தாறு அணையின் நீர்மட்டமும் 100 அடியை கடந்துவிட்டது. கருப்பாநதி, கடனாநதி,ராமநதி,குண்டாறு உள்ளிட்ட மற்ற அணைகளும் நிரம்பிவிட்டன. பாபநாசம், சேர்வலாறு ஆகிய அணைப்பகுதியில் தொடர்மழையினால் நீர்வரத்து அதிகரித்துவருகிறது. எனவே அணைகளுக்கு வரும் தண்ணீர் முழுமையாக திறந்துவிட முடிவெடுக்கப் பட்டுள்ளது. இந்த நீர் முழுமையும் தாமிரபரணி ஆற்றில் வெளியேறும் என்பதால் வெள்ளப்பெருக்கு அபாயம் உள்ளது. மாவட்டத்தில் தற்போது 3 லட்சம் ஏக்கர் பரப்பில் விவசாய பணிகள் துவங்கியுள்ளன. எனவே இந்த தண்ணீரை வீணாக ஆற்றில் திறந்து கடலில் கலப்பதற்கு பதிலாக கால்வாய்களில் திறக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதனால் இன்று தாமிரபரணியில் வழக்கத்தை விட அதிக அளவில் தண்ணீர் திறக்கப்பட உள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

**தமிழகத்தில் மழை தொடரும்**

சென்னை: கடந்த வாரம் வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி தற்போது மேற்கு நோக்கி நகர்ந்துள்ளது. இதனால் தமிழகத்தின் உள் மாவட்டங்களில் பல இடங்களில் மழை பெய்து வருகிறது. அதிக பட்சமாக நேற்று வேதாரண்யத்தில் 110 மிமீ மழை பெய்துள்ளது. முத்துப்பேட்டை 80 மிமீ, அதிராம்பட்டினம் 50 மிமீ, மதுக்கூர், பட்டுக்கோட்டை, மணல்மேல்குடி 40 மிமீ, திருச்சுழி 30 மிமீ, பாபநாசம், கந்தர்வகோட்டை, தொண்டி, காரைக்குடி, திருத்துறைப்பூண்டி, புதுக்கோட்டை, வல்லம், அறந்தாங்கி, விராலிமலை, ராமேஸ்வரம் 20 மிமீ மழை பெய்துள்ளது. இந்நிலையில், வங்கக் கடலின் தென் கிழக்கு திசையில் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவாகியுள்ளது. இதையடுத்து, தமிழக கடலோரத்தில் மழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். நகரின் சில இடங்களில் இடியுடன் மழை பெய்யும்.

**தொடர்மழை எதிரொலி உளுந்து விவசாயிகள் மகிழ்ச்சி**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் கடந்த 2 நாட்களாக விட்டு, விட்டு மழை பெய்து வந்தது. நேற்று அதிகாலை முதல் உளுந்தூர்பேட்டை, பாண்டூர், அரளி, செங்குறிச்சி, களமருதூர், மதியனூர், வண்டிப்பாளையம், திருநாவலூர், எலவனாசூர்கோட்டை கிராமங்களில் தொடர்ந்து மழை பெய்தது. இந்த

மழையினால் வர்த்தக நிறுவனங்களில் பாதிப்பு ஏற்பட்டது. மேலும் நேற்று 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரையில் உள்ள தனியார் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. மேலும் உளுந்தூர்பேட்டை மற்றும் திருநாவலூர் வட்டாரத்திற்கு உட்பட்ட கிராமங்களில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மானாவாரியாக உளுந்து பயிரிடப்பட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த 20 நாட்களுக்கு விதைக்கப்பட்டு இன்னும் 15 நாட்களில் பூக்கும் தருவாயில் உள்ள உளுந்து பயிர் தற்போது பெய்த மழையினால் நன்கு வளரும் நிலை உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். உளுந்து பயிரில் தண்ணீர் தேங்கி நிற்காமல் பார்த்துக்கொள்ள வேண் டும் என வேளாண் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது. இதை தொடர்ந்து வடிகால் வசதி அமைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

## ரூ.4.47 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனை

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் திங்கள் மற்றும் வியாழன் தோறும் மஞ்சள் ஏலம் நடக்கிறது. நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் 45 குவின்டாலும், கிழங்கு மஞ்சள் 30 குவின்டாலும் என மொத்தம் 75 குவின்டால் விற்பனைக்கு வந்தது.இதை கோவனூர், செம்மேடு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்தனர். விற்பனைக்கு வந்த மஞ்சள் அனைத்தும் விற்பனையானது. ஏலத்தில், விரலி மஞ்சள் குவின்டால் ரூ.5,789 முதல் ரூ.6,399 வரையும், கிழங்கு மஞ்சள் ரூ.5,729 முதல் ரூ.6,099 வரையும் விற்றது. இதன் மூலம் விரலி மஞ்சள் சராசரி விலை ரூ.6,000. கிழங்கு மஞ்சள் சராசரி விலை ரூ.5,900. ஈரோடு, கோவை, பொள்ளாச்சியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். விற்பனை மொத்த மதிப்பு ரூ.4.47 லட்சம். இத்தகவலை கோவை ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் சண்முகம் தெரிவித்தார்.

## தக்காளி விலை கிலோ ரூ.30க்கு விற்பனை

கோவை, :ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் தினசரி நாட்டு தக்காளி சராசரியாக 4 முதல் 8 டன், ஆப்பிள் தக்காளி 7 முதல் 8 டன் விற்பனைக்கு வரும். கடந்த ஒரு மாதமாக நாட்டுத்தக்காளி 10 டன்னும், ஆப்பிள் தக்காளி 8 முதல் 14 டன்னும் வந்து கொண்டிருந்தது. இதனால் நாட்டு தக்காளி கடந்த மாத துவக்கத்தில் ரூ.5 முதல் ரூ.10க்கும், ஆப்பிள் தக்காளி ரூ.6 முதல் ரூ.12க்கும் விற்கப்பட்டது. இந்நிலையில் கடந்த 2 வாரமாக தக்காளி வரத்து குறைய துவங்கியுள்ளது. இதனால் விலை உயரத்துவங்கியுள்ளது. கடந்த 10 நாட்களுக்கு முன்பு நாட்டு தக்காளி மற்றும் ஆப்பிள் தக்காளி கிலோ ரூ.10 முதல் ரூ.16 வரை விலை நிர்ணயிக்கப்பட்டது. இது படிப்படியாக உயர்ந்து வந்தது. கடந்த 25ம் தேதி கிலோ ரூ.14 முதல் ரூ.20 வரை நிர்ணயிக்கப்பட்டது. நேற்று ரூ.18 முதல் 26 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெளி மார்க்கெட்டில் ரூ.24 முதல் ரூ.30 வரை விற்கப்பட்டது. வரும் நாட்களில் வரத்து குறையும் என்பதால் விலை மேலும் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

## திருவாரூர் மாவட்டத்தில் 12,951 பயனாளிகளுக்கு இலவச ஆடு, மாடுகள்கலெக்டர் தகவல்

திருவாரூர்,: திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை 12,951 பேருக்கு இலவச ஆடு, மாடுகள் வழங்கப்பட்டுள்ளதாக கலெக்டர் மதிவா ணன் தெரிவித்துள்ளார். அரசு சார்பில் திருவாரூர் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள இலவச கறவை பசு மற்றும் வெள்ளாடுகள் வளர்ப்பு குறித்து பயனாளிகளிடம் கலெக்டர் நேர டியாக விளக்கம் கேட்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. திருவாரூர் அருகே வேலங் குடி ஊராட்சியில் பசுமாடுகளின் வளர்ப்பு குறித்து பயனாளிகளிடம் கலெக்டர் மதிவாணன் கேட்டறிந்தார். அப்போது மாடுகள் வாங்கிய விலை மற்றும் எந்த மாநிலத்திலிருந்து வாங்கப்பட்டது, பால்கறவை, கால்நடை மருத்துவர்கள் அடிக்கடி பார்வையிடுகின்றனரா என்பது குறித்து

கேட்டறிந்தார். பின் னர் தண்டலை ஊராட்சி மேப்பாடி கிராமத்தில் இலவச ஆடுகளின் வளர் ப்பு குறித்து பயனாளிகளி டம் கலெக்டர் மதிவாணன் நேரில் கேட்டறிந்தார். பின்னர் அங்கு ஆடுகளுக்கு கொட்டகை அமைப்பதற்காக 10 பயனாளிகளுக்கு தலா ரூ.2 ஆயிரம் வீதம் காசோலைகள் வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் கலெக்டர் மதிவா ணன் கூறியதாவது, திருவா ரூர் மாவட்டத்தில் கடந்த 2011ம் ஆண்டு முதல் தற்போது வரை 1450 பயனாளிகளுக்கு ரூ.5 கோடியே 13 லட்சத்து 99 ஆயிரத்து 500 மதிப்பில் கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளது. பசுக் களை வாங்க அரசின் சார் பில் ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக ரூ.30 ஆயிரம் மற்றும் போக்குவரத்து செலவினமாக ரூ.3 ஆயிரம் என 33 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அரசின் இலவச வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு 4 பெண் ஆடு மற்றும் ஒரு ஆண் ஆடு என மாவட்டத்தில் கடந்த 2011ம் ஆண்டுமுதல் தற்போது வரை மொத்தம் 11 ஆயிரத்து 501 பயனாளிகளுக்கு ரூ. 17 கோடியே 36 லட்சத்து 9 ஆயிரத்து 600 மதிப்பில் வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மாவட்டம் முழுவதும் 140 சிறப்பு மருத்துவ முகாம்கள் கால்நடைத்துறையின் மூலம் நடத்தப்பட்டு குடற்புழு நீக்கம் உட்பட பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மாடு மற்றும் ஆடுகள் வளர்ச்சி குறித்து அவ்வப்போது ஆய்வு செய்து சிகிச்சை அளிக்கவும் கால்நடைத்துறை மருத்துவர்களு க்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றார். ஆய்வில் கால்நடைத்துறை மாவட்ட இணை இயக்குனர் தமிழ்ச்செல்வன், துணை இயக்குனர் தனபாலன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நல்லதம்பி மற்றும் கால்நடைத்துறை மருத்துவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சேவூர் விற்பனைக் கூடத்தில் ரூ.60 லட்சம் நிலக்கடலை ஏலம்

அனுப்பர்பாளையம், : அவினாசி அருகே சேவூரில் ரூ.60 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் போனது. அவினாசி அருகே சேவூர் ஒழுங்கு முறை

விற்பனைக் கூடத்தில் நிலக்கடலை ஏலம் நேற்று நடைபெற்றது. 4,020 நிலக்கடலை மூட்டைகள் வந்திருந்தன. மொத்தம் ரூ.60 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலத்தில் விற்பனையானது. ஏலத்தில், குவிண்டால் ஒன்றுக்கு (காய்ந்தது) முதல் ரக நிலக்கடலை ரூ.4 ஆயிரம் முதல் ரூ.4,230 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ.3,600 முதல் ரூ.3,900 வரையிலும், மூன்றாவது ரக நிலக்கடலை, ரூ.3 ஆயிரம் முதல் ரூ.3,310 வரையிலும் ஏலம் போனது. குன்னத்தூர், ராயர்பாளையம், லூர்துபுரம், மங்கரசவலையபாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், மலையப்பாளையம், அன்னூர் ஆகிய பகுதிகளில் இருந்து 482 விவசாயிகளும், 9 வியாபாரிகளும் பங்கேற்றனர். இந்த தகவலை, சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு)சரவணன் தெரிவித்தார்.

## <u>பலாப்பழம் விளைச்சல் அமோகம்</u>

பண்ருட்டி, : பண்ருட்டி அருகே காடாம்புலியூரை சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலும் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் அளவில் முந்திரி மற்றும் பலா விவசாயம் நடந்து வருகிறது. இங்கு விளையும் பழங்கள் அனைத்தும் சிறப்பு பெற்ற சுவை உள்ளதால் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கு ஏற்றுமதி ஆகிறது. தானே புயலுக்கு பின், பலா விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு விளைச்சல் குறைவானது. தற்போது விவசாயிகள் தீவிர முயற்சியால் மீண்டும் பலா, முந்திரி விவசாயம் புத்துயிர் பெற்று மகசூல் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் பலாப்பழங்கள் நன்கு வளர்ந்து சீசன் துவங்கப்பட்டதால் பலா மண்டிகளில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைந்த பலாப்பழங் களை விற்பனை செய்து வருகின்றனர். நேற்று கும்பகோணம் சாலையில் உள்ள பலா மண்டிகளில் விற்பனையாக அதிகரிக்க வேண்டி பூஜை செய்து துவங்கினர். கடந்த ஆண்டு ஒரு பழம் ரூ.350 வரை விற்பனை ஆனது. தற்போது ஒரு பழத்தின் விலை ரூ. 250ஆக குறைந்துள்ளது.

இதையடுத்து பலா விவசாயிகள் பழங்களை அறுவடை செய்ய தீவிரம் காட்டிவருகின்றனர்.

**<u>சின்ன வெங்காயம் மறைமுக ஏலம்</u>**

திருச்சி, : துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை சின்னவெங்காயம் மறைமுக ஏலம் நடை பெற உள்ளது. திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் துறையூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் இயங்கி வருகிறது. இங்கு சின்ன வெங்காயம் மறைமுக ஏலம் நாளை (3ம் தேதி) நடைபெற உள்ளது. துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை உள்ளிட்ட வட்டாரங்களில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்து இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை துறையூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு கொண்டுவந்து மறைமுக ஏலத்தில் பங்கேற்கலாம். இங்கு சின்ன வெங்காயத்துக்கு நல்ல விலை பெறுவதோடு எந்தவித கமிஷனுமின்றி உடனுக்குடன் பணத்தை பெற்று கொள்ளலாம். எனவே, சின்ன வெங்காய விவசாயிகள் அனைவரும் இந்த பொது ஏலத்தில் பங்கேற்று பயன்பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**<u>சம்பா பயிரில் இலை சுருட்டுபுழு தாக்குதல் பாதுகாக்கும் வழிமுறைவிவசாயிகளுக்கு யோசனை</u>**

வேதாரண்யம்,:வேதாரண்யம் தாலுகாவில் கரியாபட்டினம், வாய்மேடு, ஆயக்காரன்புலம், மருதூர், செம்போடை, தேத்தாக்குடி, தலைஞாயிறு உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 12 ஆயி ரம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த 2நாட் களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதாலும், அவ்வப்போது மழை பெய்து வருவதாலும் சம்பா நெற்பயிரை இலைசுருட்டு புழு தாக்கியுள்ளது. இதனால் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் ஒரு சில இடங்களில் நீரில் மூழ்கியும், சில இடங்களில் வயல்களில் தண்ணீர் தேங்கியும் உள்ளது. மழை நீர் சூழ்ந்துள்ள வயலில் மகசூல் இழப்பை தடுக்கும் முறை குறித்து

வேதாரண்யம் வேளாண் உதவி இயக்குனர் தாமோதர கண்ணன் கூறியிருப்பதாவது: மழைநீர் சூழ்ந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை வடித்து வேர்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்க செய்ய வேண்டும். நடவு பயிர் முழுவதுமாக அழுகியிருக்கும் பட்சத்தில் குறுகிய கால நெல் ரகங் களை நாற்று விட்டோ அல்லது நேரடி ஈர விதைப்பு (இரண்டாம் கொம்பு) செய்திடலாம். நீரில் மூழ்கிய பயிரில் ஊட்டச்சத்து பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. இதை நிவர்த்தி செய்ய ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம் இவற்றுடன் 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு கல ந்து ஒரு இரவு முழுவதும் வைத்து தண்ணீர் வடிந்தவு டன் வயலில் இடவும். மேலும் போதிய சூரிய வெளி ச்சம் தென்பட்டவுடன் ஏக்கருக்கு 2 கிலோ யூரியாவு டன், 1 கிலோ சிங்க் சல்பேட் கலந்து 200 லிட்டர் தண்ணீர் கரைத்து கைதெளிப்பான் மூலம் இலைவழி உரமாக தெளிக்கலாம். கூண்டு புழுவை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 400 மில்லி மானோகுரோட்டோபாஸ் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைதெளிப்பான் மூலம் தெளிக்க வும். இலை சுருட்டு புழு தாக்குதல் 10 சதவீதத்திற்கு அதிகமாக தென்பட்டால், புரோபோனோபாஸ் என்ற மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைதெளிப்பான் மூலம் தெளிக்கலாம். குலைநோய் தாக்குதலுக்கான அறிகுறிகள் சிறு புள்ளிகள் இருந்தால் ஒரு ஏக்கருக்கு கார்பண்டசிம் 100 கிராம் அல்லது ட்ரைசைக் யோசோல் 200 கிராம் பூஞ்சானக்கொல்லி மருந்துகளில் ஒன்றை 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும் அல்லது சூடோமோனாஸ் நுண்ணுயிரினை 1 கிலோவை 30 கிலோ மணலுடன் கல ந்து ஒரு ஏக்கரில் சீராக தூவலாம். பாக்டீரியல் இலைக்கருகல் நோயின் அறிகுறி தென்பட்டால் ஸ்டெப்ரோமைசீன் சல்பேட் அல்லது டெட்ராசைக்ளின் 120 கிராம் மற்றும் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் ஆகியவற்றை 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான மூலம் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை

தெளிக்க வேண் டும். நோயின் அறிகுறி காணப்பட்டால் தழைச்சத்து உரமிடுவதை தவிர்க்க வும் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ராமநாதபுரம் பெரிய கண்மாய் பாசனத்திற்கு தேவையான நெல்விதைகள் இருப்பில் உள்ளது

ராமநாகபுரம், : ராமநாகபுரம் பெரிய கண்மாய் பாசன விவசாயிகளுக்கு தேவையான சான்று பெற்ற நெல் விதைகள் மற்றும் இடுபொருட்கள் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக ராமநாதபுரம் வேளாண்மை உதவி இயக்குநர் ராமசாமிபாண்டியன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது: ராமநாதபுரம் பெரிய கண்மாய்க்கு வைகை அணை தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இக்கண்மாய் மூலம் தொருவளூர், கவரங்குளம், பாப்பாகுடி, சூரங்கோட்டை, முதுனாள், களத்தாவூர், அச்சுந்தன்வயல், கூரியூர், புத்தேந்தல் மற்றும் புல்லங்குடி ஆகிய கிராமங்கள் பயன்பெறுகின்றன. இந்த தண்ணீரை பயன்படுத்தி விவசாயிகள் நெல் நாற்று விடுவதற்கு தேவையான `பிபிடி 5204 சான்று பெற்ற நெல் விதைகள் மற்றும் விதை நேர்த்திக்கான சூடோமோனாஸ், அசோஸ்பைரில்லம் உயிர் உரங்கள் ராமநாதபுரம் வேளாண் விரிவாக்க மையத்தில் போதிய அளவில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. ராமநாதபுரம் பெரியகண்மாய் பாசன ஆயக்கட்டுப்பகுதியில் காணப்படும் நுண் சத்துக்களின் குறைபாட்டினை சீர் செய்ய தேவையான நெல் நுண்ணூட்ட உரங்கள் 50 சதவீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். மேலும் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறைகளை கையாண்டு நீரை சேமிப்பதுடன், அதிக மகசூலையும் பெறலாம் என தெரிவித்துள்ளார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வேதாரண்யத்தில் கன மழை: வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது கலெக்டர் முனுசாமி ஆய்வு



வேதாரண்யம், வேதாரண்யம் பகுதியில் கனமழை காரணமாக வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளை கலெக்டர் முனுசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கனமழை வேதாரண்யம் தாலுகாவில் கடந்த 2 நாட்களாக கன மழை பெய்துவருகிறது. இதனால் கோடியக்காடு, கோடியக்கரை ஆகிய பகுதிகளில் சத்யாநகர், அண்ணாநகர், திரவுபதையம்மன் கோவில் தெரு, ஆதிவாசிகள் தெரு ஆகிய பகுதிகளில் 100-க்கும் மேற்பட்ட வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளியே வர முடியாமல் அவதிப்படுகின்றனர். கோடியக்கரை வேதாரண்யம் சாலையில் வெள்ளம் தேங்கியுள்ளது. மேலும், மழையால் உப்பளங்களில் தண்ணீர் சூழ்ந்து ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் உப்பு ஏற்றும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மழைக்கு கோடியக்கரை, கோடியக்காடு பகுதியில் 6 மாடுகள், 7 ஆடுகளும் இறந்துள்ளன. தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்றி முகாம் அமைத்து தங்க வைக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நேற்று 5-வது நாளாக மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. மழைநீர் சூழ்ந்த பகுதிகளை நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி, காமராஜ் எம்.எல்.ஏ மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டுஆய்வுசெய்தனர்.

நடவடிக்கை

அப்போது மழைநீர் சூழ்ந்துள்ள வீடுகளில் உள்ள மக்கள் வெள்ள நீர் வடியாதது குறித்து புகார் தெரிவித்தனர். விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் உறுதியளித்தார். மழையால் இடிந்த

வீடுகளை பார்வையிட்டு பசுமை வீடு திட்டத்தில் வீடு கட்டி கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். கலெக்டருடன், வேதாரண்யம் தாசில்தார் சாந்தி, ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் ராஜரத்தினம், சேகர், ஒன்றிய கவுன்சிலர் பாலசுந்தரம், நிலவள வங்கி தலைவர் சிவானந்தம், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சரவணன், ஒன்றிய துணை தலைவர் ஜெயபால், ஊராட்சிமன்ற தலைவர்கள் பவானி, மாரியப்பன் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

**<u>சேலம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.10 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்</u>**



சேலம் பள்ளப்பட்டியில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் செவ்வாய்க்கிழமை தோறும் விவசாயிகள் கொண்டுவரும் மஞ்சள் மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டு, அவை ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. அதன்படி, நேற்று கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு வாழப்பாடி, அயோத்தியாப்பட்டணம், வீரபாண்டி, ஓமலூர், மேச்சேரி மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் இருந்து 200 மூட்டை மஞ்சளை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். அங்கு விரலி மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு அதிக பட்சவிலை ரூ.6,399 என்றும், குறைந்த பட்சவிலை ரூ.4,399 என்றும், குண்டுமஞ்சள் குவிண்டாலுக்கு அதிகபட்ச விலை ரூ.5,579 என்றும், குறைந்த பட்சவிலை ரூ.4,009 என்றும், பனங்காலி மஞ்சள் அதிக பட்சவிலை ரூ.10,009 என்றும், குறைந்த பட்சவிலை ரூ.9,899 என்றும் நிர்ணயிக்கப்பட்டது. ஈரோடு, ராசிபுரம், சேலம், கரூர் ஆகிய இடங்களில் இருந்து வியாபாரிகள் மஞ்சள் மூட்டைகளை போட்டி போட்டு ஏலத்தில் எடுத்தனர். மொத்தம் ரூ.10 லட்சத்திற்கு ஏலம்

விடப்பட்டு, உடனடியாக விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

**பட்டுக்கோட்டை நகராட்சியில் மரக்கன்று நடும் விழா**



பட்டுக்கோட்டை நகராட்சியில் மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது. விழாவிற்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் வைத்திலிங்கம் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். மாவட்ட கலெக்டர் சுப்பையன் முன்னிலை வகித்தார். நகர சபை தலைவர் ஜவகர்பாபு வரவேற்றார். நகராட்சி அலுவலகம் வளாகம் மற்றும் 33 வார்டுகளிலும், வீடுகளிலும், சாலை ஓரங்களிலும் 70 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. விழாவில் மாவட்ட ஊராட்சி தலைவர் அமுதா ரவிச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், புரவலர் கார்த்திகேயன், தென்னை வாரிய உறுப்பினர் மலைஅய்யன், நகராட்சி ஆணையர் அச்சையா, நகராட்சி என்ஜினீயர் ரெங்கராசு, துப்புரவு அலுவலர் மூர்த்தி, நகராட்சி நகரமைப்பு அலுவலர் ராமலிங்கம், நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர், துப்புரவு ஆய்வாளர்கள், நகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**காரைக்காலில் இருந்து சரக்குரெயிலில் 1,300 டன் யூரியா உரம் தஞ்சை வந்தது**



காரைக்காலில் இருந்து சரக்குரெயிலில் 1,300 டன் யூரியா உரம் நேற்று தஞ்சை வந்தது. சம்பா, தாளடி சாகுபடி காவிரி டெல்டா

மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டத்தில் சம்பா, தாளடி என 12 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு சாகுபடி பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இதுவரை 3 லட்சத்து 23 ஆயிரம் ஏக்கரில் சம்பா, தாளடி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த பயிருக்கு தேவையான யூரியா உரம் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். மேலும் விவசாயிகள் உரத்தட்டுப்பாட்டை போக்க வலியுறுத்தி பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

1,300டன்உரம்

இந்த நிலையில் உரத்தட்டுப்பாட்டை போக்கும் வகையில் சீனாவில் இருந்து 60 ஆயிரம் டன் யூரியா உரம் கப்பல் மூலம் காரைக்கால் துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்னர் அங்கிருந்து சரக்கு ரெயில்கள் மூலம் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி காரைக்கால் துறைமுகத்தில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 21 பெட்டிகளில் 1,300 டன் யூரியா உரம் தஞ்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன்படி தஞ்சை ரெயில் நிலையத்துக்கு உரமூட்டைகளை ஏற்றிய சரக்கு ரெயில் நேற்று வந்தது. சரக்கு ரெயிலில் இருந்து உரமூட்டைகள் லாரிகளில் இறக்கப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு வினியோகம் செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டன. தட்டுப்பாடு நீங்கியது

இது குறித்து தஞ்சை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- தஞ்சை மாவட்டத்தில் சம்பா, தாளடி பருவத்திற்கு உரத்தேவையில் கடந்த மாதம் 12 ஆயிரத்து 157 மெட்ரிக் டன் யூரியா பல்வேறு நிறுவனங்களில் இருந்து வரவழைக்கப்பட்டு தனியார் மற்றும் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டன. மேலும் இந்த மாதம் யூரியா உரம் தேவை 10 ஆயிரம் டன் ஆகும். தற்போது 1,300 டன் யூரியா உரம் வந்துள்ளது. 2,600 டன் யூரியா உரம் தஞ்சை ரெயில் நிலையத்துக்கு

நாளை (வியாழக்கிழமை) வரவழைக்கப் பட்டு கூட்டுறவு சங்கங்கள் மூலம் வினியோகிக்கப்பட உள்ளது. மேலும் காரைக்கால் கப்பல்தளத்தில் இப்கோ நிறுவனத்தின் மூலம் 2 கப்பல் களில் 1 லட்சத்து 16 ஆயிரம் டன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டு ரெயில் மூலம் டெல்டா மாவட்டங்கள் முழுவதிலும் உள்ள வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு வினியோகிக்கப்பட உள்ளது. இதைத் தொடர்ந்து தஞ்சை மாவட்டத்தில் யூரியா தட்டுப்பாடு முற்றிலும் நீங்கி உள்ளது. இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.